<u>**பொள்ளாச்சி நகராட்சி**</u>

<u>**சாதாரண க் கூட்டம்**</u>

**30.09.2022 தேதி வெள்ளிக் கிழமை மாலை 4.30 மணிக்கு பொள்ளாச்சி நகராட்சி நகரமன்ற கூட்டரங்கில் நடைபெற்ற நகரமன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

| வ.எண் | பொருள் விபரம் | தீர்மானம் |
|---|---|---|
| 1 | பொள்ளாச்சி நகராட்சியில் வார்டு எண்.09, சுப்பையன் நகரில் புதிதாக கேட்வால்வு மற்றும் பொதுக்குழாய் அமைத்து கிணற்று நீர் வழங்க நகரமன்ற உறுப்பினர், கோரிக்கை தெரிவித்துள்ளார். இதற்கிணங்க இப்பகுதியில் கிணற்றுநீர் விநியோகத்திற்கான பகிர்மான குழாய் அமைக்கப்பட்ட நிலையில் உள்ளது. தற்பொழுது, கேட்வால்வு மற்றும் பொதுக்குழாய்கள் 10 எண்ணம் அமைப்பதற்கும், இதற்கான மதிப்பீடு ரூ.0.11 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பணியின் மதிப்பீட்டுத் தொகையினை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ளுவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்: 2229/2022/இ3** | **தீர்மானம் எண். 333**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 2 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.36 VIP கார்டன் பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு வேண்டி புதிய விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு ஜோதிநகர் 80 அடி சாலையிலுள்ள பகிர்மான குழாயிலிருந்து VIP கார்டனில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள பகிர்மான குழாயுடன் இணைத்துதர பொருத்துநர் கோரியுள்ளார். இப்பகுதியில் பகிர்மான குழாய் அமைப்பதற்கு ரூ.1.25 | **தீர்மானம் எண்.334**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பணியின் மதிப்பீட்டுத் தொகையினை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்: 4765 /2022/இ1** | |
| 3 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.33–ல் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்திற்கு குடிநீர் மற்றும் குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டிற்கு தண்ணீர் இல்லை என்பதால், குடிநீர் மற்றும் கிணற்று நீர் குழாய் அங்கன்வாடி மையத்திற்கு தேவைப்படுகிறது. எனவே, புதிய குடிநீர் குழாய் மற்றும் கிணற்று நீர் குழாய் அமைப்பதற்கு ரூ.0.32 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பணியின் மதிப்பீட்டுத் தொகையினை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ளுவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்: 3800 /2022/இ3** | **தீர்மானம் எண். 335**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 4 | திரு.செல்வகுமார் என்பவரால் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் இழப்பீட்டு தொகை வழங்க கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் W.P.No 13392/2021ன்படி ஆணையாளர் பொள்ளாச்சி நகராட்சி அவர்களை இரண்டாம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடரப்பட்டது மேற்படி வழக்கின் 28.06.2022ஆம் தேதி "The Second Respondent is directed to deduct a sum of rs 10,000/- From the Salary Payable to one S.T.Balaji Whose name is found in Paragraph 6(ii) of Page 15 of the typed set of papers and it can be released | **தீர்மானம் எண். 336**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | depending upon the outcome of the order in the writ petition and list the matter for hearing on 26.07.2021" என உத்தரவிடப்பட்டது. அதனை தொடர்ந்து திரு செல்வகுமார் என்பவரால் தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு மேல்முறையீடு செய்யப்பட்டதில் ரூ.10,000/- மனுதாரருக்கு அனுப்பப்பட்டதனை தொடர்ந்து வழக்கு முற்றாக்கப்பட்டதாக மாநில தகவல் ஆணையத்தில் நாள்.19.08.2021ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது.<br>தற்போது மேற்படி வழக்கிற்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் அவமதிப்பு வழக்கு எண் C.P No 1697/2022ல் ஆணையாளர் பொள்ளாச்சி நகராட்சி அவர்களை பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்குகளை நகராட்சி சார்பாக நடத்தித்தர 05.09.2022ல் திரு.B.ஆனந்த் B.A.,B.L அரசு வழக்கறிஞர் நியமிக்கப்பட்டதனை மன்றம் ஏற்று, அவர்கள் மூலம் நடத்திடவும், மேலும் மேற்கண்ட வழக்கிற்காகும் உத்தேச செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்: **2775/2022/ஜி1** | |
| 5 | கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செயல்முறைகள் ந.க.எண்.4288/2022/கை1, நாள்.22.08.2022-ன்படி மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் கோவை மாவட்டத்தில் 24.08.2022 அன்று அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், கலந்துகொண்ட பொறுப்பு அலுவலர் 1 வது மண்டலம் பயனாளிகளுக்கு மதிய உணவு வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் உத்திரவிட்டதற்கிணங்க கோவை பீளமேடு, தியாகி குமரன் வீதி பகுதியில் உள்ள "பேமஸ்குக்" உணவகத்திலிருந்து வரப்பெற்ற இரசீதுக்கான தொகை ரூ.1,58,760/-ஐ பேமஸ்குக் உணவகத்திற்கு வழங்கிட கேட்பு | **தீர்மானம் எண். 337**<br>**அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td>கிடைக்கப்பெற்றதை தொடர்ந்து அவசர அவசியம் கருதி கேட்பின் அடிப்படையில் தொகை காசோலையாக வழங்கப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.<br><u>அலுவலக குறிப்பு :</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 5744/2022/அ1</td>
<td></td>
</tr>
<tr>
<td>6</td>
<td>தூய்மை இந்தியா திட்டம் 2.0 (2022–23)–ன் கீழ் பொள்ளாச்சி நகராட்சி கால்நடை சந்தையில் புதியதாக பொதுக்கழிப்பிடம் கட்டுதல் பணிக்கு ரூ.31.28 இலட்சம் மதிப்பீட்டிற்கு 15.09.2022–ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.
<table>
<tr><td>1.</td><td>திரு.M.விக்னேஷ்குமார், பொள்ளாச்சி</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 5.00% அதிகம்.</td></tr>
<tr><td>2.</td><td>M/S:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி..</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 7.38% அதிகம்.</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.M.விக்னேஷ்குமார், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி 5.00% அதிகமாக உள்ளது. எனவே, திரு.M.விக்னேஷ்குமார், பொள்ளாச்சி அவர்களிடம் ஒப்பந்தப்புள்ளியில் விலை குறைப்பு செய்துதர அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டதில் தற்சமயம் கட்டுமான பொருட்களின் விலை ஏற்றத்தாலும் ஆட்கள் கூலி உயர்வாக இருப்பதாலும் ஏற்கனவே வழங்கிய ஒப்பந்தப்புள்ளியில் விலையை குறைத்து மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 4.98% அதிகம் என்ற விலை விகிதத்தில் செய்துதர கடிதம் கொடுத்துள்ளார்.<br>எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.M.விக்னேஷ்குமார், பொள்ளாச்சி</td>
<td>தீர்மானம் எண். 338<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மேற்காண் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.18856/2022/தூஇதி–2, நாள்.13.07.2022–ல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளார்.<br>2. இப்பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.301, நாள்.30.08.2022–ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>3. மேற்காண் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாக மதிப்பீட்டை விட 4.98% அதிகம் என ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.M.விக்னேஷ்குமார், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>**ந.க.எண்: 2680/2022/இ1** | |
| 7 | பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு இயக்கப்படும் வாகனம் எண் TN 41 AU 6370 (LCV TATA ACE) வாகனத்திற்கு பழுதுகள் நீக்கம் செய்யும் பணிக்கு ஆகும் தோராய செலவினமாக ரூ.65,500/–ஆகும். இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்: 5762/2022/எச்2** | **தீர்மானம் எண். 339<br>அனுமதிக்கப்பட்டது** |
| 8 | பொள்ளாச்சி நகராட்சி நல்லூர் குப்பைக்கிடங்கில் குவியலாக கொட்டப்பட்டுள்ள குப்பைகளை Hitachi வாடகை வாகனம் மூலம் அகற்றும் பணிக்கு ரூ.1,50,000/– மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் | **தீர்மானம் எண். 340<br>பதிவு செய்யப்பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td>மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது. பணியின் அவசர அவசியம் கருதி 03.03.2022 – ஆம் தேதி விலைப்புள்ளி கோரி 04.03.2022 அன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.<br><u>விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு:–</u>
<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை</th></tr>
<tr><td>1</td><td>மாரியம்மாள் எர்த் மூவர்ஸ்,1/9செல்வகுமார் கவுண்டர்<br>விஸ்தரிப்பு,வடுகபாளையம்,பொள்ளாச்சி.</td><td>ரூ.1900/– (Per Hour)</td></tr>
<tr><td>2</td><td>காளியம்மாள் எர்த் மூவர்ஸ்,3/120 நரசிங்கபுரம், மண்ணூர்,பொள்ளாச்சி.</td><td>ரூ.2100/– (Per Hour)</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள மாரியம்மாள் எர்த் மூவர்ஸ் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஆணையரின் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :</u><br>1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>ந.க.எண்:1849/2022/எச்2</td>
<td></td>
</tr>
<tr>
<td>9</td>
<td>பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான உடுமலை சாலை பகுதியில் உள்ள நகராட்சி பழைய பெண்கள் மேல்நிலைப்பள்ளி கட்டிடம் திரு.திருமூர்த்தி என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்டு, ந.க.எண்.2372/2021/அ6 நாள்.12.04.2022–ன்படி நிலுவை தொகை ரூ.1,40,98,992/– செலுத்திட அறிவிப்பு வழங்கப்பட்டது. அவ்வறிவிப்பினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No. 16686/2022, மற்றும் W.M.P.No. 15980, 15984, 15991 மற்றும்</td>
<td>தீர்மானம் எண். 341<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | 15981/2022 வழக்கு அன்னாரால் தொடரப்பட்டுள்ளது. தற்போது திரு.B.ஆனந்த் வழக்கறிஞரிடமிருந்து 12.09.2022–ம் தேதி வரப்பெற்ற கடிதத்தின்படி திரு.ஹாஜா நஸ்ருதீன் Additional Advocate General Tamilnadu அவர்களை இவ்வழக்கில் ஈடுபடுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கின் முக்கியத்துவம் கருதி வழக்கை மேற்கண்ட கூடுதல் பொது வழக்கறிஞரை நியமனம் செய்வதற்கும் மற்றும் இவ்வழக்கிற்கான அனைத்து செலவினங்களுக்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>வழக்கின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரிடம் 10.08.2022–ல் முன் அனுமதி பெறப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்: 2372/2021/அ6** | |
| 10 | பொள்ளாச்சி நகராட்சி தூய்மை பாரத இயக்கம் நகர்ப்புற 2.o 2021–22–ன் கீழ் வார்டு எண்.28 சி.டி.சி காலனியில் சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் பணிக்கு ரூ.24.96 இலட்சத்தில் 26.05.2022–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்திரவு 06.06.2022–ல் வழங்கப்பட்டதில் ஏற்கனவே சி.டி.சி காலனியில் பொதுக்கழிப்பிடம் உள்ளதாலும், அப்பகுதிவாழ் மக்கள் எதிர்ப்பு தெரிவித்தும் அதன் அருகாமையிலுள்ள நடராஜ் மணியகாரர் காலனியில் பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க அதே மதிப்பீட்டு தொகைக்கும், அதே ஒப்பந்ததாரர் மூலம் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணி முக்கிய திட்டப் பணியாக இருப்பதாலும் குறித்த காலத்திற்குள் பணியினை முடிக்க வேண்டியுள்ளதாலும் இடம் மாற்றி பணியினை | **தீர்மானம் எண். 342<br>அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்: 2679/2022/இ1** | |
| 11 | பொள்ளாச்சி நகராட்சியின் கிழக்கு பகுதியில் உள்ள 19 வார்டுகளில் குடிநீர் விநியோகம் செய்யப்படும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் குடிநீர் கசிவுகளையும், குடிநீர் விநியோகம் செய்ய பயன்படும் மதகுகளில் (வால்வு) ஏற்படும் கசிவுகளையும், பொதுக் குழாய்களில் ஏற்படும் கசிவுகளையும், குடிநீர் குழாய்களில் ஏற்படும் அடைப்புகள், மற்றும் கிணற்று நீர் குழாய்களில் ஏற்படும் கசிவுகளையும் முறையே பராமரிப்பு செய்ய வேண்டியுள்ளது, மேலும் அவ்வப்பொழுது குடிநீர் குழாய் உடைப்பு சரி செய்தல் மற்றும் அடைப்புகள் ஆகியவற்றை சரி செய்து பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளதாலும், குடிநீர் அத்தியாவசிய பணியான இப்பணியை மேற்கொள்ள ரூ.4.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்: 4568/2022/இ1** | **தீர்மானம் எண். 343**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 12 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண் 35 தாயுமானவர் வீதி மற்றும் PRK வீதி ஆகிய பகுதிகள் மேட்டு பகுதிகளாக இருப்பதால் விநியோககிக்கப்படும் குடிநீர் அளவு குறைவாக வருகிறது. எனவே புதிய பகிர்மான குழாய் அமைத்து குடிநீர் சீராக விநியோகம் செய்யவேண்டி, மேற்கண்ட பகுதிகளுக்கு 100 அடி சாலை | **தீர்மானம் எண். 344**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | மற்றும் 80 அடி சாலையில் செல்லும் பகிர்மான குழாயிலிருந்து புதிய பக்ரிமான குழாய் அமைப்பதன் மூலம் சீரான குடிநீர் வழங்கலாம், இதற்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ. 2.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பணியின் மதிப்பீட்டுத் தொகையினை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ளுவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்: 6296 /2022/இ1** | |
| 13 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.33, நடராஜ் மணிகாரர் காலனி மற்றும் பெரியார் காலனி மேற்கு பகுதிக்கு HDPE–Tank அமைத்து தர நகர்மன்ற உறுப்பினர் கோரியுள்ளார். இதில் நடராஜ் மணியகாரர் காலனியில் இரண்டு இடங்களில் HDPE–Tank வைப்பதற்கு மேற்கண்ட பகுதியில் ஏற்கனவே Tank வைப்பதற்கு ஒரு அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு அடித்தளம் அமைத்து HDPE–Tank வைக்க வேண்டும் மற்றும் பெரியார் காலனி மேற்கு பகுதிக்கு ஒரு அடித்தளம் அமைத்து HDPE–Tank வைக்க வேண்டும். இதற்கு ஆகும் உத்தேச செலவு ரூ.3.40 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பணியின் மதிப்பீட்டுத் தொகையினை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்: 3903/2022/இ1** | **தீர்மானம் எண்.345**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 14 | பொள்ளாச்சி நகராட்சியின் மேற்கு பகுதியில் உள்ள 17 வார்டுகளில் குடிநீர் | **தீர்மானம் எண். 346** |

| | | |
|---|---|---|
| | விநியோகம் செய்யப்படும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் குடிநீர் கசிவுகளையும், குடிநீர் விநியோகம் செய்ய பயன்படும் மதகுகளில் (வால்வு) ஏற்படும் கசிவுகளையும், பொதுக் குழாய்களில் ஏற்படும் கசிவுகளையும், குடிநீர் குழாய்களில் ஏற்படும் அடைப்புகள், மற்றும் கிணற்று நீர் குழாய்களில் ஏற்படும் கசிவுகளையும் முறையே பராமரிப்பு செய்ய வேண்டியுள்ளது, மேலும் அவ்வப்பொழுது குடிநீர் குழாய் உடைப்பு சரி செய்தல் மற்றும் அடைப்புகள் ஆகியவற்றை சரி செய்து பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளதாலும், குடிநீர் அத்தியாவசிய பணியான இப்பணியை மேற்கொள்ள ரூ.4.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. இப்பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்: 6295/2022/இ1** | **அனுமதிக்கப்பட்டது** |
| 15 | பொள்ளாச்சி நகர பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தடையின்றி விநியோகம் செய்ய ஏதுவாக நகராட்சி பகுதிகளில் உள்ள 9 உயர்மட்ட நீர் தேக்க தொட்டிகள் மற்றும் 2 தரைமட்ட நீர் தேக்க தொட்டிகள் ஆகியவற்றில் நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் கீழ்க்கண்டவாறு **Outsourcing** முறையில் சுயஉதவிக்குழு மூலம் பணியாட்களை அமர்த்தி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்து வரப்படுகிறது.<br><table><tr><td>1.</td><td>1). வெங்கடேசா காலனி OHT<br>2).Shumps – 2 Nos</td><td>–</td><td>3 நபர்கள்</td></tr><tr><td>2.</td><td>மகாலிங்கபுரம் OHT (2 Nos)</td><td>–</td><td>3 நபர்கள்</td></tr></table> | **தீர்மானம் எண். 347**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 3. | சுதர்சன் நகர் OHT | – | 3 நபர்கள் |
| 4. | கே.ஆர்,ஜி,பி நகர் OHT | – | 3 நபர்கள் |
| 5. | VKV லே அவுட் OHT | – | 2 நபர்கள் |
| 6. | KC பார்க் OHT | – | 3 நபர்கள் |
| 7. | சோமசுந்தரம் லே அவுட் OHT | – | 2 நபர்கள் |
| 8. | ஜோதி நகர் OHT | – | 2 நபர்கள் |
| | மொத்தம் | | **21 நபர்கள்** |

மேற்கண்ட பணியாட்களுக்கு Outsourcing முறையில் மூன்றாண்டுகளுக்கு பணியமர்த்திட நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதலின்படி ந.க.எண்.21787/2021/EA2, நாள்.02.10.2021–ன் படி நடவடிக்கைகள் மேற்கொள்ள கருத்துருக்கள் அனுப்பப்பட்டது. தற்போது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.G.O.(Ms).No.112, Dated.17.08.2022 –ன் படி ஒப்பந்த அடிப்படையில் பணியாட்களை அமர்த்திக் கொள்ள அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதற்கேற்ப பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் விநியோகத்தில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை விதிமுறைகளுக்குட்பட்டு பணியாளர்களை அமர்த்திக்கொள்ள மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப வேண்டியுள்ளது. மேற்காண் பணியை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி மற்றும் தலைமைப் பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெற்றபின்புதான் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலும். ஒப்பந்தபுள்ளிகள் கோரும் வரையிலும் மேற்கண்ட பணியை சுயஉதவிக் குழு மூலம் **அக்டோபர் 2022** மாதத்திற்கு, மேற்கண்ட பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர், கோவை அவர்களின்

| | | |
|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட விலைவிகிதத்தின் படி கூலி, EPF, ESI, Insurance தொகையுடன் ஊதியம் வழங்கவும், இதற்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4.30 இலட்சம் ஆகும். மேற்காண் செலவு தொகையினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் இப்பணியினை சுய உதவிக்குழுவின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று சுய உதவிக் குழுவின் மூலம் விலைப்புள்ளிகள் கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்: 2012/2022/இ1** | |
| **16** | பொள்ளாச்சி நகராட்சியிலுள்ள 9 உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் 2 தரைமட்ட நீர் தேக்க தொட்டிகள் ஆகியவற்றில் சுய உதவிக்குழு மூலம் பணியாட்களை அமர்த்துவதற்கு அக்டோபர் 2022 மாத பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.4.30 இலட்சம் ஆகும்.<br>எனவே, விலைப்புள்ளி கோரி இப்பணியை செய்ய 21.09.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்க்கண்டவாறு. | **தீர்மானம் எண். 348**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| வ. எண் | பெயர் | விலைப்புள்ளி தொகை ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு |
|---|---|---|
| 1 | காளியம்மன் மகளிர் சுய | ரூ.576.00 |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>உதவிக்குழு,<br>காளியண்ணன் புதூர்,<br>கோவில்பாளையம்,<br>பொள்ளாச்சி – 642 110.</td><td></td></tr>
<tr><td>2</td><td>ராஜகாளியம்மன் மகளிர் சுய உதவிக்குழு,<br>காளியண்ணன் புதூர்,<br>கோவில்பாளையம், பொள்ளாச்சி.</td><td>ரூ.635.00</td></tr>
<tr><td>3</td><td>மாகாளியம்மன் மகளிர் சுயஉதவிக்குழு,<br>சேரன்நகர்,<br>கோவில்பாளையம், பொள்ளாச்சி.</td><td>ரூ.685.00</td></tr>
</table>
வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாகவும் மற்ற விலைப்புள்ளிகளை விட குறைவாகவும் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.576.00 என விலைப்புள்ளி அளித்துள்ள காளியம்மன் மகளிர் சுய உதவிக்குழு, பொள்ளாச்சி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அலுவலகக்குறிப்பு :</u>
1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.576.00 என விலைப்புள்ளி அளித்துள்ள காளியம்மன் மகளிர் சுய உதவிக்குழு, பொள்ளாச்சி அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
ந.க.எண்: 2012/2022/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>17</td>
<td>பொள்ளாச்சி நகர பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தடையின்றி விநியோகம் செய்ய ஏதுவாக நகராட்சி பகுதிகளில் உள்ள 9 உயர்மட்ட நீர் தேக்க தொட்டிகள் மற்றும் 2 தரைமட்ட நீர் தேக்க தொட்டிகள் ஆகியவற்றில்</td>
<td>தீர்மானம் எண். 349<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் கீழ்க்கண்டவாறு **Outsourcing** முறையில் சுயஉதவிக்குழு மூலம் பணியாட்களை அமர்த்தி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்து வரப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | 1). வெங்கடேசா காலனி OHT<br>2).Shumps - 2 Nos | – | 3 நபர்கள் |
| 2. | மகாலிங்கபுரம் OHT (2 Nos) | – | 3 நபர்கள் |
| 3. | சுதர்சன் நகர் OHT | – | 3 நபர்கள் |
| 4. | கே.ஆர்,ஜி,பி நகர் OHT | – | 3 நபர்கள் |
| 5. | VKV லே அவுட் OHT | – | 2 நபர்கள் |
| 6. | KC பார்க் OHT | – | 3 நபர்கள் |
| 7. | சோமசுந்தரம் லே அவுட் OHT | – | 2 நபர்கள் |
| 8. | ஜோதி நகர் OHT | – | 2 நபர்கள் |
| | மொத்தம் | | **21 நபர்கள்** |

மேற்கண்ட பணியாட்களுக்கு **Outsourcing** முறையில் மூன்றாண்டுகளுக்கு பணியமர்த்திட நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதலின்படி ந.க.எண்.**21787/2021/EA2,** நாள்.**02.10.2021–**ன் படி நடவடிக்கைகள் மேற்கொள்ள கருத்துருக்கள் அனுப்பப்பட்டது. தற்போது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.G.O.(Ms).No.112, Dated.17.08.2022 –ன் படி ஒப்பந்த அடிப்படையில் பணியாட்களை அமர்த்திக் கொள்ள அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதற்கேற்ப பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் விநியோகத்தில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை விதிமுறைகளுக்குட்பட்டு பணியாளர்களை அமர்த்திக்கொள்ள மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை

| | | |
|---|---|---|
| | அவர்களுக்கு அனுப்ப வேண்டியுள்ளது. மேற்காண் பணியை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி மற்றும் தலைமைப் பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெற்றபின்புதான் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலும். ஒப்பந்தபுள்ளிகள் கோரும் வரையிலும் மேற்கண்ட பணியை சுயஉதவிக் குழு மூலம் **நவம்பர் 2022** மாதத்திற்கு, மேற்கண்ட பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர், கோவை அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட விலைவிகிதத்தின் படி கூலி, **EPF, ESI, Insurance** தொகையுடன் ஊதியம் வழங்கவும், இதற்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4.30 இலட்சம் ஆகும். மேற்காண் செலவு தொகையினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் இப்பணியினை சுய உதவிக்குழுவின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்: 2012/2022/இ1** | |
| 18 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.09, ராஜாஜி வீதியில் சேதமடைந்துள்ள RCC குழாய் சிறுபாலத்தை (Pipe culvert) புதுப்பித்து தருமாறு நகரமன்ற உறுப்பினர், கோரிக்கை தெரிவித்துள்ளார். எனவே, பழுதடைந்த குழாய் சிறுபாலத்தை அகற்றிவிட்டு புதிதாக RCC சிறுபாலம் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.30 இலட்சம் ஆகும். மேற்கண்ட மதிப்பீட்டு தொகையை நகராட்சி பொது நிதியில் ஒதுக்கீடு செய்து பணியை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மானம் எண்.350**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பணிக்கான தொகையை நகராட்சி பொது நிதி அனுசரித்து ஒதுக்கீடு செய்து பணி மேற்கொள்வும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்: 6084/2022/இ1** | |
| 19 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.05, கணபதி நகரில் மழைநீர் வடிகால் அமைத்து தருமாறு நகரமன்ற உறுப்பினர், கோரிக்கை தெரிவித்துள்ளார். எனவே, பழுதடைந்த மழைநீர் வடிகால் தென்பகுதி கரை மிகவும் சேதம் அடைந்துள்ளது. எனவே மழைநீர் வடிகாலின் பகுதியில் Toe Wall அமைத்து Ruble stone masonry மூலம் இப்பணியை மேற்பொள்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட மதிப்பீட்டு தொகையை நகராட்சி பொது நிதியில் ஒதுக்கீடு செய்து பணியை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பணிக்கான தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணி மேற்கொள்வும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்: 4010/2022/இ1** | **தீர்மானம் எண். 351**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 20 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.10, LIG Colony ல் 1 வது மற்றும் 2 வது குறுக்கு சந்து இடங்களில் நகர மன்ற தலைவர் அவர்களுடன் இடம் பார்வை இடப்பட்டதில் சாலை இரண்டுபக்கமும் உள்ள பகுதிகளுக்கு பேவர் பிளாக் அமைக்க தெரிவிக்கப்பட்டது. எனவே இப்பணியினை மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட மதிப்பீட்டு தொகையை நகராட்சி பொது நிதியில் ஒதுக்கீடு செய்து பணியை மேற்கொள்ள மன்ற அனுமதி | **தீர்மானம் எண். 352**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பணிக்கான தொகையை நகராட்சி பொது நிதி அனுசரித்து ஒதுக்கீடு செய்து பணி மேற்கொள்வும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்: 5840/2022/இ1** | |
| 21 | பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் நகராட்சி கிழக்கு பகுதியில் உள்ள 19 வார்டுகளில் குடிநீர் கசிவுகள் பொதுக்குழாய் நீர்க்கசிவு, மதகுகள் நீர்க்கசிவு, அடைப்புகள் மற்றும் கிணற்றுநீர் கசிவுகள் பராமரிப்பு செய்தல் பணிக்கு ரூ.4.90 இலட்சம் மதிப்பீட்டிற்கு 12.08.2022 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.<br>1. திரு.A.சதீஸ்குமார், பொள்ளாச்சி. — மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.05% குறைவு.<br>2. M/S:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி.. — மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.56% அதிகம்.<br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.A.சதீஸ்குமார், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.05% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.A.சதீஸ்குமார், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ந மன்றம் | **தீர்மானம் எண்.353**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | ஏற்கலாம்.<br>2. மேற்காணும் பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**ந.க.எண்: 4568/2022/இ1** | |
| 22 | பொள்ளாச்சி நகராட்சியில் பொது நிதி மற்றும் குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் பணிகள் செய்வதற்கு 21.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் பின்வரும் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பரிசீலித்து அங்கீகரிக்க வேண்டப்படுகிறது. | **தீர்மானம் எண். 354 அனுமதிக்கப்பட்டது** |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளியின் விபரம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|
| | **பொது நிதி :** | | |
| 1 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.1, திருவேங்கடம் நகர் பகுதியில் பழுதடைந்துள்ள மழைநீர் வடிகாலினை சீரமைத்தல் பணி. | 3.40 | திரு:V.M.திருமூர்த்தி– 0.23% குறைவு<br>திரு.R.கோவிந்தராஜ் – 3.22% அதிகம் |
| 2 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.02 | 1.70 | திரு:V.M.திருமூர்த்தி– 0.20% குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | செல்லக்குமார் வீதியில் பழுதடைந்துள்ள சிறுபாலத்தை புதுப்பித்தல் பணி. | | திரு.R.கோவிந்தராஜ் – 3.17% அதிகம் | | |
| | 3 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.3 ராஜா ராமண்ணா நகர் பகுதியில் நடைபாதை அமைத்தல் பணி. | 5.40 | M/s.K.R.காளிதாஸ் அன் கோ – 0.26% குறைவு M/s:தண்டபாணி அன் கோ –3.61% அதிகம் | | |
| | 4 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.14 KVR நகர் பகுதியில் சிறுபாலம் அமைத்தல் பணி. | 1.90 | M/s.K.R.காளிதாஸ் அன் கோ – 0.24% குறைவு M/s:தண்டபாணி அன் கோ – 3.74% அதிகம் | | |
| | 5 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.15 குமரன் நகர் 2–வது தெரு பகுதியில் பழுதடைந்துள்ள சிறுபாலத்தை புதுப்பித்தல் பணி. | 2.10 | திரு.N.பரமேஸ்வரன் – 0.13% குறைவு திரு.A.சதீஸ்குமார் – 3.26% அதிகம் | | |
| | 6 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.16 பாலகிருஷ்ணா லே | 2.00 | M/s.K.R.காளிதாஸ் அன் கோ – 0.11% குறைவு. M/s:தண்டபாணி அன் | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | அவுட் பாபு பேக்கரி அருகில் உள்ள பழுதடைந்த சிறுபாலத்தை அகற்றிவிட்டு புதிதாக அமைத்தல் பணி. | | கோ – 3.20% அதிகம் | | |
| | | 7 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.19 அபுல்கலாம் தெருவில் பழுதடைந்துள்ள சிறுபாலத்தை புதுப்பித்தல் பணி. | 1.90 | திரு.U.அரீஃப்கான் – 0.18% குறைவு.<br>M/s.திருமலை அன் கோ – 3.05% அதிகம் | | |
| | | 8 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.27 கரிகால சோழன் வீதியில் பழுதடைந்துள்ள சிறுபாலத்தை புதுப்பித்தல் பணி. | 1.60 | M/s.ஸ்ரீ முருகா அசோசியேட்ஸ் – 0.08% குறைவு<br>M/s. துரையன் அன் கோ – 2.97% அதிகம் | | |
| | | 9 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண் 33 சின்னசாமி லே அவுட் மற்றும் வாசுகி நகர் பகுதியில் பழுதடைந்துள்ள | 1.70 | M/s.ஸ்ரீ முருகா அசோசியேட்ஸ் – 0.16% குறைவு.<br>M/s. துரையன் அன் கோ –2.23% அதிகம் | | |

| | | | |
|---|---|---|---|
| | சிறுபாலத்தை புதுப்பித்தல் பணி. | | |
| 10 | **<u>குடிநீர் வழங்கல் நிதி:</u>** பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.12 அழகம்மாள் லே அவுட்டில் புதிதாக கிணற்றுநீர் பகிர்மானக்குழாய் மற்றும் பொதுக்குழாய் அமைத்தல் பணி. | 0.55 | திரு.A.சதீஸ்குமார் – 0.10% குறைவு<br>M/s:தண்டபாணி அன் கோ – 2.20% அதிகம். |

மேற்காண் பணிகளில் வரிசை எண்.01 முதல் 10 வரைக்கான பணிகளுக்கு மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்க அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

மேற்காண் பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்: 2165/2022/இ1**

---

**23**

பொள்ளாச்சி நகராட்சியில் பொது நிதியின் கீழ் பணிகள் செய்வதற்கு 21.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் பின்வரும் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பரிசீலித்து அங்கீகரிக்க வேண்டப்படுகிறது.

| வ. | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர்கள் |
|---|---|---|---|

**தீர்மானம் எண். 355 அனுமதிக்கப்பட்டது**

| எண் | | ரூ.இலட்சத்தில் | மற்றும் ஒப்பந்தப்புள்ளியின் விபரம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|
| | **பொது நிதி :** | | |
| 1 | பொள்ளாச்சி நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள 35 எண்ணிக்கையிலான CCTV கேமரா மற்றும் சார்பு உபகரணங்களை ஆண்டு பராமரிப்பு செய்தல். | 3.60 | M/s.Syscon Systems – 0.45% குறைவு<br>M/s.Sagar Electronics - 3.16% அதிகம். |
| 2 | பொள்ளாச்சி நகராட்சி அலுவலகத்தில் கூடுதலாக கேமரா மற்றும் இதர உபகரணங்கள் CCTV Camera, Airtel, DTH, Pendrive, HP Colour Tonner மற்றும் Rail Wire Internet இணைப்பு ஆகிய உபகரணங்கள் வாங்கி பொருத்துதல். | 2.40 | M/s.Syscon Systems – 0.10% குறைவு.<br>M/s.Sagar Electronics - 2.51% அதிகம். |

மேற்காண் பணிகளில் வரிசை எண்.01 மற்றும் 02 ஆகிய பணிகளுக்கு

| | | |
|---|---|---|
| | மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்க அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>மேற்காண் பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>**ந.க.எண்: 3734/2022/இ1** | |
| 24 | பொள்ளாச்சி நகராட்சியில் பொது நிதி நிதியின் கீழ் பணிகள் செய்வதற்கு 21.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் பின்வரும் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலித்து அங்கீகரிக்க வேண்டப்படுகிறது. | **தீர்மானம் எண். 356**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளியின் விபரம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|
| | **<u>பொது நிதி :</u>** | | |
| 1 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.06, கோட்டாம்பட்டி வடக்கு வீதியில் பழுதடைந்த சிறுபாலத்தை அகற்றி புதிதாக அமைத்தல். | 1.60 | M/s. துரையன் அன் கோ – 0.07% குறைவு. M/s.ஸ்ரீ முருகா அசோசியேட்ஸ் – 2.30% அதிகம். |
| 2 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.07 பாலாஜி நகர் பழுதடைந்துள்ள | 1.60 | M/s. துரையன் அன் கோ – 0.07% குறைவு. M/s.ஸ்ரீ முருகா |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | சிறுபாலத்தை புதுப்பித்தல் பணி. | | அசோசியேட்ஸ் – 2.30% அதிகம் | |
| | 3 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.9–ல் அண்ணா அவென்யூ மற்றும் கேரளா சமாஜ் அருகில் சிறுபாலம் அமைத்தல் பணி. | 2.90 | M/s. துரையன் அன் கோ – 0.21% குறைவு.. M/s.ஸ்ரீ முருகா அசோசியேட்ஸ் – 2.15% அதிகம். | |
| | 4 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.10 தெண்மண்டல் பிளாக் பகுதியில் உள்ள 3 இடங்களில் சிறுபாலம் அமைத்தல் பணி. | 5.60 | திரு.R.கோவிந்தராஜ் – 0.24% குறைவு. திரு:V.M.திருமூர்த்தி – 2.23% அதிகம். | |
| | 5 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.13 வள்ளியம்மாள் லே அவுட் பகுதியில் சிறுபாலம் அமைத்தல் பணி. | 1.60 | திரு:V.M.திருமூர்த்தி– 0.26% குறைவு. திரு.R.கோவிந்தராஜ் – 3.09% அதிகம். | |
| | 6 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.20 மாரப்பன் வீதியில் பழுதடைந்துள்ள சிறுபாலத்தை புதுப்பித்தல் பணி. | 2.70 | M/s.திருமலை அன் கோ – 0.09% குறைவு. திரு.U.அரீஃப்கான் – 3.03% அதிகம். | |
| | 7 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு | 3.00 | M/s.திருமலை அன் | |

| | | | |
|---|---|---|---|
| | எண்.21, ராமகிருஷ்ணாபுரம் மற்றும் அன்சாரி வீதியில் சிறுபாலம் அமைத்தல் பணி. | | கோ – 0.15% குறைவு.. திரு.U.அரீஃப்கான் – 3.53% அதிகம். |
| 8 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண். 22 நந்தனார் காலனியில் பழுதடைந்துள்ள சிறுபாலத்தை புதுப்பித்தல் பணி. | 1.60 | M/s. துரையன் அன் கோ – 0.17% குறைவு. M/s.ஸ்ரீ முருகா அசோசியேட்ஸ் – 3.53% அதிகம். |
| 9 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.23, CP ராமகிருஷ்ணசாமி லே அவுட் பகுதியில் பழுதடைந்துள்ள சிறுபாலத்தை புதுப்பித்தல் பணி. | 1.60 | M/s. துரையன் அன் கோ – 0.20% குறைவு. M/s.ஸ்ரீ முருகா அசோசியேட்ஸ் – 3.17% அதிகம். |
| 10 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.24 சோமசுந்தராபுரம் லே அவுட்டில் பழுதடைந்துள்ள சிறுபாலத்தை புதுப்பித்தல் பணி. | 1.60 | M/s. துரையன் அன் கோ – 0.20% குறைவு. M/s.ஸ்ரீ முருகா அசோசியேட்ஸ் – 3.17% அதிகம்.. |
| 11 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.26 சத்திரம் வீதியில் பழுதடைந்துள்ள மழைநீர் | 6.00 | திரு:V.M.திருமூர்த்தி – 0.06% குறைவு. திரு.R.கோவிந்தராஜ் – |

| | | | |
|---|---|---|---|
| | வடிகாலினை சீரமைத்தல் பணி. | | 3.16% அதிகம். |
| 12 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.31 மரப்பேட்டை பகுதியில் புதிதாக இரும்பு பாலம் அமைத்தல். | 1.70 | திரு.N.பரமேஸ்வரன் – 0.18% குறைவு. திரு.A.சதீஸ்குமார் – 3.13% அதிகம். |
| 13 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.32 வெள்ளையம்மாள் லே அவுட்டில் சிறுபாலம் அமைத்தல் பணி. | 1.90 | திரு.U.அரீஃப்கான் – 0.19% குறைவு. M/s.திருமலை அன் கோ – 3.02% அதிகம். |
| 14 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.35 PK கந்தசாமி வீதியில் பழுதடைந்துள்ள சிறுபாலத்தை புதுப்பித்தல் பணி. | 2.20 | திரு.U.அரீஃப்கான் – 0.10% குறைவு.. M/s.திருமலை அன் கோ – 3.07% அதிகம். |

மேற்காண் பணிகளில் வரிசை எண்.01 முதல் 14 வரைக்கான பணிகளுக்கு மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மேற்காண் பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்: 3110/2022/இ1**

| | | |
|---|---|---|
| 25 | <u>இரங்கல் தீர்மானம்</u><br>பின்வரும் மதிப்பிற்குரிய முன்னாள் நகர் மன்ற தலைவர் மற்றும் முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் திடீரென காலமாகி விட்டது குறித்து நகர் மன்ற தலைவரால் இரங்கல் தெரிவிக்க நகர் மன்ற துணைத் தலைவர் முன் மொழிந்த பொருள் குறித்து<br>1. மதிப்பிற்குரிய.திரு.ம.விஜயராகவன் – முன்னாள் நகர்மன்ற தலைவர்<br>2. மதிப்பிற்குரிய.திரு.எஸ்.சாந்துமுகமது– முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் | **தீர்மானம் எண். 357**<br>**இந்நகர்மன்றம் மேற்காண் இருவரது மறைவிற்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.** |

**(ஒப்பம்) திருமதி.ந.சியாமளா நவநீதகிருஷ்ணன்**
**நகர் மன்ற தலைவர்**
**பொள்ளாச்சி நகராட்சி**

**//உண்மை நகல்//**

**ஆணையாளர்**
**பொள்ளாச்சி நகராட்சி**